**செய்தி வெளியீடு எண்: 205** **நாள்: 05.03.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 4.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை சார்பில் சென்னை, கெல்லீஸில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகத்தில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துயிற்கூடங்கள், கழிவறைகள், குளியலறைகள், சமையலறையுடன் கூடிய உணவு அருந்தும் கூடம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சிறுவர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் சென்னை, கெல்லீஸில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாக கருதப்படும் சிறார்கள் தங்க வைக்கப்படுகிறார்கள். இங்கு சிறார்களுக்கு தேவையான உணவு, உடை மற்றும் இதர அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுவதுடன், இச்சிறார்களுக்கு உளவியலாளர் மூலம் மனநல ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது. மேலும், இச்சிறார்களுக்கு முறைசாராக் கல்வி, தொழிற் கல்வி சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

சென்னை கெல்லீஸ் சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்ல கட்டடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் அனைத்து வசதிகளையும் கொண்ட 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30.8.2016 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, கெல்லீஸில் செயல்பட்டு வரும் அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகத்தில் உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருந்த பழைய கட்டடத்தை இடித்து, அவ்விடத்தில் முதற்கட்டமாக தரைத்தளத்தில் 1000 சதுர மீட்டர் பரப்பளவில் துயிற்கூடங்கள், கழிவறைகள், குளியலறைகள், சமையலறையுடன் கூடிய உணவு அருந்தும் கூடம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுவர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.ஆர். லால்வேனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**